# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1773/25 - 2012 අගෝස්තු 29 වැනි බදාදා - 2012.08.29

*1773/25 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காடுகள் அடங்கிய காணிகளைப் பாதுகாக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இலும்பகந்த வத்தை என்னும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கலவான பிரதேச செயலாளர் பிரிவில், குக்குலு கோரளையில், உடபத்துவையில், இலும்பகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மு. கி. ப. 932 இன் மேலதிக இல. 01 மற்றும் தாள் இல. 01 இல் துண்டு இல. 848 தொடக்கம் 851 வரை (04 காணித் துண்டுகள்) காட்டப்பட்டுள்ள அளவில் சுமார் 20.4489 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணமுடைய 'இலும்பகந்த தோட்டம்' எனும் காணியின் எல்லைகள்:

**1. துண்டு இல. 848**
காணியின் பெயர் : இலும்பகந்த வத்த ; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: எச். டீ. பியதாச, இல. 280, பராக்கிரம மாவத்தை, பேலியகொட ; விஸ்தீரணம்: 5.7801 ஹெக்டயார்ஸ்.

**2. துண்டு இல. 849**
காணியின் பெயர் : இலும்பகந்த வத்த ; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: எச். டீ. பியதாச, இல. 280, பராக்கிரம மாவத்தை, பேலியகொட ; விஸ்தீரணம்: 4.1265 ஹெக்டயார்ஸ்.

**3. துண்டு இல. 850**
காணியின் பெயர் : இலும்பகந்த வத்த ; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: எச். டீ. பியதாச, இல. 280, பராக்கிரம மாவத்தை, பேலியகொட ; விஸ்தீரணம்: 3.0013 ஹெக்டயார்ஸ்.

**4. துண்டு இல. 851**
காணியின் பெயர் : இலும்பகந்த வத்த ; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: எச். டீ. பியதாச, இல. 280, பராக்கிரம மாவத்தை, பேலியகொட ; விஸ்தீரணம்: 7.5410 ஹெக்டயார்ஸ்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கலவான பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. டீ. எல். உதய குமாரி,
பிரதேச செயலாளர்,
கலவான.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கலவான,
2012.08.22.

09-373

---

திருத்தம்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : ம/அபி/03/226.

2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 1718/17ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 3810 இல் துண்டு இல. 166 ஆனது துண்டு இல. 292, 293 என கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.

**துண்டு இல. 292**

காணியின் பெயர் : மில்லகஹவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம், 25-30 வருட வயதுள்ள 02 பலா மரங்கள், 40-50 வருட வயதுள்ள ஒரு பலா மரம், 8-10 வருட வயதுள்ள 05 மகோனி மரங்கள், மலசலகூடம் ஒன்று, ஒரு நிரந்தரக் கட்டிடம் மற்றும் நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி, முட்டுச் சுவர் மற்றும் தண்ணீர் தாங்கி ஒன்றும் காணப்படுகின்றன ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: கே. அதுல ஜயந்த, ரீ. அதுல ஜயந்த், இல. 52/7, ராஜசிங்க மாவத்தை, ராகம வீதி, கடவத்தை ; விஸ்தீரணம் : 0.2750 ஹெக்டயார்.

**துண்டு இல. 293**

காணியின் பெயர் : மில்லகஹவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: ஜே. ஏ. டீ. வி. ஜே. ஜயசூரிய, இல. 300/42, ஸ்டரலின் வீதி , இஹல கரகஹமுண, கடவத்தை ; விஸ்தீரணம் : 0.0167 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக துண்டு இல. 292 தொடக்கம் 293 வரையான காணிக்கு 2012ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தமரா டீ பெரேரா,
பிரதேச செயலாளர்,
மஹர.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மஹர,
2012.08.24.

09-374